ශ්‍රී ලංකා නීතිඥ සංගමය
இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம்
**BAR ASSOCIATION OF SRI LANKA**

23 ஆகஸ்ட் 2022

**போராட்டக்காரர்களை தடுத்து வைப்பதற்காக பயங்கரவாத தடைச்சட்டத்தை தவறாக பயன்படுத்துதல் குறித்த .இலங்கை சட்டத்தரணிகள் சங்க நிறைவேற்றுக்குழுவின் அறிக்கை**

அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தில் பங்கேற்றிருந்த போராட்டக்காரர்களை கைது செய்வதற்காகவும் தடுத்து வைப்பதற்காகவும் பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்துவது குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஆழ்ந்த கரிசனங்களை கொண்டுள்ளது.

19 ஆகஸ்ட் 2022 அன்று வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையின் பிரகாரம், 09 ஏப்ரல் 2022 அன்று முதலான போராட்டங்களில் இடம்பெற்ற சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் தற்பொழுது தடுப்பு காவலில் வைக்கப்பட்டிருப்பதாக இலங்கை பொலிஸ் குறிப்பிட்டது. பாதுகாப்பு அமைச்சர் எனும் வகையில் தனக்குறித்தான அதிகாரங்களின்படி பயங்கரவாத தடைச் சட்டத்தின் 9ஆம் சரத்தின் கீழ் மூன்று போராட்டக்காரர்களிற்குமான 90 நாள் தடுத்து வைப்பதற்கான உத்தரவு ஜனாதிபதியினால் கையெழுத்திடப்பட்டுள்ளமை கவனத்திற்கொள்ளத்தக்கதாகும்.

பயங்கரவாத தடைச்சட்டம் என்பது நபர்களை கைது செய்வதற்கும் நீண்ட காலத்திற்கு தடுத்து வைப்பதற்கும் ஜனாதிபதிக்கு பரந்த அதிகாரங்களைத் வழங்கும் சட்டத்தின் ஒரு கடுமையான பகுதியாகும். தடுத்து வைப்பதற்கான உத்தரவுகள் அடிப்படை உரிமைகளிற்கும் குறித்த நீதிமன்றங்களது அதிகார வரம்புகளிற்கும் உட்பட்டதாயினும், பொதுச்சட்டத்தின் கீழான கைதுகள் மற்றும் தடுப்பு போன்ற நிகழ்வுகளிலான கிரமமான நீதித்துறை மேற்பார்வைகளிற்கு உட்பட்டனவல்ல. நிர்வாகத்துறையினாலான தடுத்துவைத்தல் என்பது சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமைகள் பாதுகாப்பு தர நியமங்களிற்கு எதிராக நபர்களது பௌதீக சுதந்திரம் மற்றும் நீதித்துறையின் மேற்பார்வை இன்றிய நீண்ட கால தடுத்து வைத்தல்கள் என்பனவற்றிற்காக ஜனாதிபதிக்கு பரந்த அதிகாரங்களை வழங்குகின்றது. தடுப்பில் வைக்கப்படும் நபர்கள் சித்திரவதைகளிற்கும் மனிதாபிமானமற்ற நடத்தைகளிற்கும் உட்படுத்தப்படுவதற்கான அபாயங்களும் காணப்படுகின்றன.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் ஏற்பாடுகள், அடிப்படை உரிமைகள் மற்றும் நீதிப்பேராணை மனுக்கள் குறித்த நீதிமன்றங்களது பல தீர்ப்புக்களிலும் 22 மார்ச் 2022 ஆம் திகதி பயங்கரவாத தடைச்சட்டத்தை திருத்துவது குறித்த விவாதங்களின் இரண்டாம் வாசிப்பின் பொழுது பல பாராளுமன்ற உறுப்பினர்களால் அவதானிக்கப்பட்டவாறான அன்றைய திகதியின் ஹன்சார்ட் குறிப்புகளின் பிரகாரமும் மீளவும் தவறாக பயன்படுத்தப்பட்டமை குறித்து சான்றாதாரப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த விவாதத்தின் பொழுது அப்போதைய பாராளுமன்ற உறுப்பினராக காணப்பட்ட தற்போதைய ஜனாதிபதி கௌரவ ரணில்



President Saliya Pieris PC | Deputy President Anura Meddegoda PC | Secretary Isuru Balapatabendi | Treasurer Rajindh Perera | Assistant Secretary Mehran Careem

No. 153, Mihindu Mawatha, Colombo 12, Sri Lanka.
Telephone : +94 11 2447134, +94 11 2331697, Fax : +94 11 2448090 E-mail: basl.lawnet@gmail.com Web: www.basl.lk

விக்கிரமசிங்க அவர்கள் “மீளவும், அது தவறாக பயன்படுத்தப்படுத்தப்பட்டுள்ளது” என குறிப்பிட்டிருந்தார்கள்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதன் பயன்பாட்டினை நியாயப்படுத்தக்கூடியதான பயங்கரவாத விஸ்தீரணங்களிற்கான விதந்துரைக்கப்பட்ட சான்று குறிகாட்டிகளான மிகவும் விதிவிலக்கான சூழ்நிலைகளை கொண்டிருக்க வேண்டும். பயங்கரவாத தடைச்சட்டம் என்பது பயங்கரவாத நிலைகளை விளக்குவதனை நோக்காக கொண்டிருக்க வேண்டுமே தவிர தண்டனைச்சட்டக் கோவை உள்ளிட்ட நாட்டின் பொதுச்சட்டத்திற்குட்பட்ட போராட்டங்கள் போன்ற அரசாங்கத்திற்கு எதிரான எதிர்ப்புக்களின் போது இடம்பெற்றிருக்கக்கூடிய குற்றங்களிற்காக பயன்படுத்தப்படக்கூடாது.

உண்மையில், ‘பயங்கரவாத தடைச்சட்ட ஏற்பாடுகளில் பிரேரிக்கப்பட்ட பிரதான மாற்றங்களை கட்டமைத்தல்’ எனும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் தயாரிக்கப்பட்ட ஆவணத்திற்கான, அப்போதைய வெளியுறவுத்துறை அமைச்சர், பாரளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸிற்கான 15 டிசெம்பர் 2021 ஆம் திகதியிலான கடிதத்தில், பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புறாத நபர்களை கைது செய்து தடுத்து வைப்பதற்காக பயங்கரவாத தடைச்சட்டத்தை தவறாக பயன்படுத்துவதனை தடுப்பதற்காக பயங்கரவாத தடைச்சட்டத்தின் 2(1) ஆம் சரத்தினை திருத்த வேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வாதிட்டிருந்தது.

பயங்கரவாத தடைச்சட்ட பயன்பாடு குறித்த சட்ட அவகாசங்களை அமுல்படுத்துவதான இலங்கை அரசாங்கத்தின் உத்தரவாதங்களை மீறி பயங்கரவாத தடைச்சட்டம் தற்பொழுது அமுல்படுத்தப்படுகின்றது என்பதனை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிற்கொள்கின்றது. 22 மார்ச் 2022 ஆம் திகதியிலான ஹன்சார்டினில் குறிப்பிடப்பட்டுள்ளதின் பிரகாரம், மேற்கூறிய பாராளுமன்ற விவாதத்தில், அப்போதைய நீதி அமைச்சரும் தற்போதைய வெளிநாட்டலுவல்கள் அமைச்சருமான கௌரவ எம்.யு.எம்.அலி சப்ரி அவர்கள், பின்வருமாறு பாராளுமன்றில் கூறியிருந்தார்கள்:

“இதன் விளைவாக, 2021 செம்டெம்பர் முதல், பயங்கரவாதத்துடன் நேரடியான தொடர்புகளையுடை குற்றங்களை தவிர்த்து ஏனையவற்றின் மீது பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தப்படுவது தடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறாக, இவை இது பொருட்டான முன்னேற்றகரமான நடவடிக்கைகளாகும்.”

அத்துடன் பயங்கரவாத தடைச்சட்டத்தின் பயன்பாடு என்பது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளினால் இலங்கைக்கு வழங்கப்படும் GSP+ வரிச்சலுகைகளின் நீட்டிப்புடன் தொடர்புடைய ஒரு விடயம் என்பதனையும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கருத்திற்கொள்கின்றது. பயங்கரவாத தடைச்சட்டத்தினை தவறாக பயன்படுத்துவதானது ஜெனிவாவின் ஐநா. மனித உரிமைகள் பேரவையில் மீளவும் கவனத்திற்கொள்ளப்பட்டுள்ளது.



| President | Deputy President | Secretary | Treasurer | Assistant Secretary |
|---|---|---|---|---|
| Saliya Pieris PC | Anura Meddegoda PC | Isuru Balapatabendi | Rajindh Perera | Mehran Careem |

No. 153, Mihindu Mawatha, Colombo 12, Sri Lanka.
Telephone : +94 11 2447134, +94 11 2331697, Fax : +94 11 2448090 E-mail: basl.lawnet@gmail.com Web: www.basl.lk

இத்தகைய சூழ்நிலைகளுடன் பயங்கரவாத தடைச்சட்டத்திலும் பயங்கரவாதம் தொடர்பில் தெளிவான விளக்கங்களும் காணப்படாத நிலையில், சட்டப்பூர்வ எதிர்ப்பினை அடக்குவதற்காக மாத்திரமன்றி, பேச்சு மற்றும் கருத்து சுதந்திரம், அமைதியாக ஒன்று கூடல் மற்றும் குழுவாக ஒன்று சேருதல் ஆகிய உரிமைகள் உள்ளிட்ட தங்களது ஜனநாயக உரிமைகளை செயற்படுத்துவோரை இலக்கு வைப்பதற்கும் அது தவறாக பயன்படுத்தப்படக்கூடிய பாரிய அச்சுறுத்தல் காணப்படுகின்றது.

இதன்காரணமாக, இத்தகைய வழிமுறைகளில் பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவதனை தவிர்க்கவும் மேற்கூறிய வழிகளில் வழங்கப்பட்ட தடுத்து வைத்தல் உத்தரவுகளை உடனடியாக மீளப்பெறவும் ஜனாதிபதி அவர்களையும் சட்ட அமுலாக்க அதிகாரிகளையும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கமானது கேட்டுக்கொள்கின்றது.

**ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ்**
**தலைவர்**
**ஸ்ரீலங்காவின் சட்டத்தரணிகள் சங்கம்**

**இசுரு பாலபடபெந்தி**
**செயலாளர்**
**ஸ்ரீலங்காவின் சட்டத்தரணிகள் சங்கம்**



President Saliya Pieris PC | Deputy President Anura Meddegoda PC | Secretary Isuru Balapatabendi | Treasurer Rajindh Perera | Assistant Secretary Mehran Careem

No. 153, Mihindu Mawatha, Colombo 12, Sri Lanka.
Telephone : +94 11 2447134, +94 11 2331697, Fax : +94 11 2448090 E-mail: basl.lawnet@gmail.com Web: www.basl.lk